**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.3/2020**

| | | |
|---|---|---|
| **NAME** | : | மணிகண்டன் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 22.12.2022.**

குறுக்கு விசாரணை

எனக்கு 33 முடிந்து 34 வயதாகிறது. ஆதார் அட்டை வைத்துள்ளேன். எனக்கு குரும்பப்பாளையம் கிராமம் சொந்த ஊராகும். அது வேலூர் தாலுக்கா என்றால் சரி. திருமணி என்ற ஊர் செய்யார் தாலுக்கா எனக்கு தெரியும். அந்த ஊருக்கு நான் நிறைய தடவை போயுள்ளேன். அங்கு எங்கள் பெரியம்மா லலிதா இருக்கிறார். தற்போதும் அவர் உயிரோடு இருக்கிறார். எங்கள் பெரியப்பா பெயர் முருகேசன் என்று நினைக்கிறேன். அவர் இறந்துவிட்டார். பெரியம்மா வீட்டிற்கு நான் அடிக்கடி செல்வேன். என் அப்பாவை பார்த்திருக்கிறேன். என் அப்பா இறக்கும்போது எனக்கு நான்கரை வயது. வழக்கில் உள்ள விவரங்கள் பற்றி என் அப்பாவிடம் பேசியுள்ளேனா என்றால் இந்த வழக்கு இப்போதுதான் வந்தது. நான் மெக்கானிக்காக இருக்கிறேன். கடலூர் மாவட்டத்தில் மெக்கானிக்காக வேலை பார்க்கிறேன். கடந்த ஒன்றரை வருடமாக வேலை பார்க்கிறேன். அதற்கு முன்னால் ஆற்காட்டில் வேலை செய்தேன். முதலில் சென்னையில் வேலை பார்த்தேன். சென்னையில் 6 வருடம் வேலை பார்த்தேன். அதற்குப் பிறகு வேலூரில் 8 வருடம் வேலை செய்தேன். தற்போது கடலூரில் வேலை பார்க்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள திருமணச்சான்று வா.த.சா.ஆ.4 பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. மறுபடியும் மாற்றி கல்யாணத்தை பற்றி தெரியும் என்றார். இதைப்பற்றி சுமார் 5 வருடத்திற்கு முன்பாக தெரியும். இதில் சொல்லப்பட்டுள்ள பெயர்கள் பற்றி எனக்கு தெரியும். 2003ல் இந்த ஆவணத்தை வாங்குவதற்கு என்ன காரணம் என்றால் ஒரு திருமணச்சான்று தேவை இருந்ததால் வாங்கினேன். எந்த முறையில் திருமணம் நடந்தது என்று தெரியுமா என்றால் இந்து

முறையில் நடந்தது. எப்படி கூறுகிறாய் என்றால் நான் இந்து. என் அம்மா பெயர் ரதினம்மாள் என பெண் பெயர் போட்டுள்ளது. ரதினா என்பவர் இந்துவே இல்லை என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு 3 பெயர்கள். ரதினா, புள்ளிமா, ஷகிலா என 3 பெயர்கள். மற்றவர்கள் கூப்பிடுவதை வைத்து நான் சொல்கிறேன். நான் பிளஸ் 2 முடித்துவிட்டு ஐடிஐ படித்துள்ளேன். கணியம்பாடி உயர்நிலைப்பள்ளியில் படித்தேன். என்னுடைய டிசி வீட்டில் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதில் பெயரெல்லாம் வேறு உள்ளதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த ஆவணம் வா.த.சா.ஆ.4ல் எங்களால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ஆள்மாறாட்டம் செய்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் 2021ல் ஆனது. அழைப்பிதழ் போட்டுள்ளோம். அந்த அழைப்பிதழை தாக்கல் செய்யவில்லை, வீட்டில் உள்ளது. என் அப்பா என் திருமணத்தின்போது உயிரோடு இல்லை. என் அம்மாவின் பிறந்த தேதி 04.06.1974 என்றால் ஆதார் கார்டு, வாக்காளர் அட்டை, பான் கார்டில் அவ்வாறு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள திருமணப் பத்திரிக்கையில் என் அம்மாவின் திருமண நாள் 27.07.1987 என காணப்படுகிறது. நான் பிறந்த நாள் 03.06.1989 என வா.த.சா.ஆ.11ல் காணப்படுகிறது என்றால் சரி. ராமஜெயம் இறந்த தேதி 02.01.1994 என்றால் சரி. என் அப்பா இறக்கும்போது எனக்கு வயது 4 வயது 12 நாட்கள் என்றால் சரிதான். எனக்கு புத்தி தெரிந்து என் அப்பா ஒன்றரை வருடம் இருந்தார். அதன்பிறகு இறந்துவிட்டார். என் அப்பாவும், அம்மாவும் சேர்ந்து இருந்த போட்டோ எங்களிடம் இல்லை. என் அம்மாவுடன் நான் இருந்த போட்டோ இல்லை. தாவா வழக்கு போடுவதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. 12,13 பிரதிவாதிகளை நான் பார்த்தது கிடையாது, பேசியது கிடையாது. ஆவணத்தின் அடிப்படையில் நான் தெரிந்து கொண்டேன். தாவா சொத்து எங்கு இருக்கிறது என எனக்குத் தெரியும். (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.